

*Awardees with Sankara Nethralaya chairman emeritus Dr SS Badrinath and other guests at the Helen Keller Remembrance Day function in Chennai recently.*

# Sankara Nethralaya chief hails Lions Clubs

**NT Bureau**

Chennai, July 4:

Chairman Emeritus of Sankara Nethralaya Dr S S Badrinath heaped praise on the qualities of Dr G Sitalakshmi as an ophthalmologist and also as a human being and thanked Lions Club of Central Madras for instituting an award in her name for up-and-coming cornea specialists in the country.

He was speaking at the Hellen Keller Remembrance Day function held at Sankara Nethralaya here recently.

Badrinath also praised Lions Club of Central Madras for its service to society at large in various fields and had been conducting eye screening camps, for cataract, diabetic retinopathy, school students, awareness camps on the need and necessity for eye donation.

This year, the awardees were -- Eyecare Award: Lions NAB Eye Hospital, Miraj, Maharashtra and Dr K V Reddy Memorial Lions Eye Hospital, Bodhan, Nizamabad, Telangana. Knight of the Blind Award: Dr Neredu Krishna, opthalmologist, Dr K V Reddy Memorial Eye Hospital, Bodhan,

Dhanashree Prasad Airsang, Ophthalmic Assistant, Lions NAB Eye Hospital, Miraj; Dr G Sitalakshmi Gift of Sight Award: Dr Archana K Biradar.

TN Dr MGR Medical University Vice-Chancellor Prof Dr D Shantharam, was the chief guest. Lions District 324-A1 Governor Dr K Balachandra Reddy and Lions International Director Endorsee N S Sankar were present.

Lions Past District Governor Dr K S Lakshmi felicitated N S Sankar on his election as International Director Endorsee at multiple level and wished him success.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
29.06.2014

# ஹெலன் கெல்லரின் நினைவு நாள் விழா




சென்னை: கண் பார்வையற்றவர்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட, ஹெலன் கெல்லரின் நினைவு நாள் விழாவின் ஒரு பகுதியாக, கண் மருத்துவத்தில் சிறந்து விளங்கும் டாக்டர்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு, அரிமா சங்கம் சார்பில் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

ஹெலன் கெல்லர், அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள, துஸ்கும்பியாவில், 1880 ஜூன், 27ல் பிறந்தார். 19 மாதங்களில் ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக, கண் பார்வை, கேட்கும் திறன், பேசும் திறனை இழந்தார். எனினும், கடும் முயற்சியால், உடல் பாதிப்புகளில் இருந்து மீண்டு வந்தார். உலகப் புகழ் பெற்ற பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார். ஹெலன் கெல்லரின் நினைவு நாள் விழா, மத்திய சென்னை அரிமா சங்கம் சார்பில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் நடந்தது. இந்நிகழ்ச்சியில், கண் நலம் மற்றும் கண் தானம் போன்ற சேவைகளில் சிறப்பாகச் செயல்பட்ட டாக்டர்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு, சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. டாக்டர் சீதா லட்சுமி, 'கிப்ட்

ஆப் சைட்' விருதை, கண் மருத்துவத்தில் சிறப்பாகச் செயல்படும், மகாராஷ்டிரா மாநிலம், மீரஜைச் சேர்ந்த, டாக்டர் அர்ச்சனாவிற்கு, டாக்டர் எம்.ஜி.ஆர்., பல்கலைக்கழக துணை வேந்தர் சாந்தாராம் வழங்கினார்.

**'ஐ கேர்' விருது:**

'நைட் ஆப் பிளைன்ட்' விருது, தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் கே.வி.ரெட்டி மருத்துவமனையின் டாக்டர் நேருடு கிருஷ்ணா மற்றும் மீரஜைச் சேர்ந்த தனஸ்ரீ பிரசாத் ஏர்சங்க் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இதேபோல், கண் மருத்துவத்தில் சிறப்பாகச் செயல்பட்டு, மீரஜைச் சேர்ந்த என்.ஏ.பி., கண் மருத்துவ மனை மற்றும் தெலுங்கானாவை மாவட்டத்தைச் சேர்ந்த ரெட்டி மெமோரியல் கண் மருத்துவமனைகளுக்கு, 'ஐ கேர்' விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், அரிமா சங்கம் மற்றும் சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

http://www.dinamalar.com/news_detail.asp?id=1009422

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
29.06.2014

# 'கிப்ட் ஆப் சைட்' விருது வழங்கும் விழா



சென்னை: அரிமா சங்கம் மத்திய சென்னை சார்பில், ஹெலன் கெல்லரின் நினைவு நாள் விழாவை முன்னிட்டு, கண் மருத்துவத்தில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு, டாக்டர் சீதா லக்ஷ்மியின் 'கிப்ட் ஆப் சைட்' விருது வழங்கும் விழா நடந்தது. இதில், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சாந்தாராம் பங்கேற்று விருதுகள் வழங்கினார். விருது பெற்றவர்கள் டாக்டர் அர்ச்சனா, டாக்டர் பசுஷாராவ், நீருடு கிருஷ்ணா, தனஸ்ரீ பிரசாத் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. உடன், (இடமிருந்து) அரிமா சங்கத்தின் முன்னாள் கவர்னர் லட்சுமி, டாக்டர் பத்ரிநாத், அரிமா சங்க தலைவர் விஜயலட்சுமி தாவா, அரிமா சங்க கவர்னர் சங்கர், ஹரிநாராயணன் மற்றும் சுரேந்தர்

http://www.dinamalar.com/districtevent_detail.asp?news_id=1009166